# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி எச்சங்கள் 1994 முதல் 1996 வரையான காலப் பகுதிக்குரியவை

## தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் அறிக்கையில் தெரிவிப்பு






முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட எச்சங்கள் 1994 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரியவை என தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் இன்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன்,

“ஏற்கனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட எச்சங்களில் இருந்து எடுக்கப்பட்ட அனைத்து பிற பொருட்கள் தொடர்பான பேராசிரியர் ராஜ் சோமதேவவின் மன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் அடிப்படையில், அது தொடர்பில், முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

2 ▶


# மாலைக்கதிர்

Maalaikkathir






சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 10 வியாழக்கிழமை 22.02.2024 கதிர் 187

# விமான நிலையத்துக்கு காணி சுவீகரிப்பு விபரங்களை அனுப்பிவைக்குமாறு கடிதம்

## ஜனாதிபதி செயலகம் அதிரடி நடவடிக்கை




யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளில் யாழ். சர்வதேச விமான நிலையத்துக்கென 500 ஏக்கரை மீள அளவீடு செய்வது தொடர்பாக பணிகளின் அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன் சந்திரவுக்குக் கடிதம் அனுப்பபட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்கென மக்கள் மீளக் குடியேறியுள்ள வலிகாமம் வடக்கு பிரதேசத்தின் குரும்பசிட்டி ஜே-242, கட்டுவன் ஜே-238, கட்டுவன் மேற்கு ஜே-239, குப்பிளான் வடக்கு ஜே-211, மயிலிட்டி தெற்கு ஜே-240 கிராமங்களில் காணி அளவீடுகள் இடம்பெறுகின்றன என்று மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், அது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் எழுத்து மூலம் தெரியப்படுத்தியிருந்தார்.

2 ▶

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெதுப்பகங்கள் மூடல்!

அதிக நீர், மின்சாரக் கட்டணம் மற்றும் வற் வரி காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெதுப்பகங்கள் நாடு முழுவதும் மூடப்பட்டுள்ளதாக வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெதுப்பக உற்பத்திகள், முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் நுகர்வோர் வெதுப்பக பொருட்களின் பாவனையிலிருந்து விலகியமை போன்ற காரணங்களால் வெதுப்பக தொழில்துறை பின்னடைவை சந்தித்துள்ளதாக அதன் தலைவர் என்.கே.குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாணுக்கான வர்த்தமானியின் பிரகாரம், தேவையான எடை மற்றும் விலையை காட்சிப்படுத்தாத 453 வெதுப்பகங்கள் மற்றும் கடைகளுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுத்து வருவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஒரு பாணின் எடை 450 கிராம் எனவும்,

2 ▶

# பொலிஸ் மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னகோன் அவரை நியமிக்க விருப்பமென அமைச்சர் டிரான் கருத்து

பொலிஸ் மா அதிபர் பதவிக்கு தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை நியமிப்பதே தமது விருப்பம் என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் இந்த விபரத்தைக் குறிப்பிட்டார்.

அதன்படி எதிர்வரும் 26ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள பதில் பொலிஸ் மா அதிபரின் பதவிக்காலம் மற்றும் நிரந்தர பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை பொலிஸ் மா அதிபர் பதவிக்கு

2 ▶

# பசில் ராஜபக்சவின் சொகுசு வீடு அரசாங்க செயற்பாடுகளுக்கு

## நீதியமைச்சர் தகவல்!

கம்பஹா, மல்வானையில் உரிமையாளர் ஒருவர் அல்லாத சொகுசு ரக வீட்டை அரசாங்க செயற்பாடுகளுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்சவினால் மல்வானையில் 16 ஏக்கர் நிலப்பரப்பில், நிர்மாணிக்கப்பட்டதாக கூறப்படும் நீச்சல் தடாகத்துடனான சொகுசு வீடு தொடர்பாக, கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

குறித்த வீட்டை நிர்மாணிக்க

2 ▶

# மின்சாரக் கட்டணத் திருத்த யோசனை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம்

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான யோசனை இன்று (22) பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கையளிக்கவிருப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்திருந்தது.

மின்சார சபையால் ஈட்டப்படும் இலாபத்தை நுகர்வோருக்கு வழங்கும் நோக்கில் இது தொடர்பான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படுவதாக அதன் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்ட மின் கட்டண திருத்தத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம், இந்த புதிய கட்டணத் திருத்தத்தில் முற்றாக நீக்கப்படும் என மின்சார சபை அறிவித்துள்ளதாக மின்சார மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று (21) நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார். (04)

# இலங்கை மக்களுக்கு செம்மஞ்சள் எச்சரிக்கை!

வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களுக்கு செம்மஞ்சள் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

நாட்டின் சில இடங்களில் உணரப்படும் வெப்பநிலை கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் கம்பஹா, கொழும்பு, ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் சில இடங்களிலும் இந்த நிலைமை காணப்படக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளது. (04)

# யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் இன்று முதல் போராட்டம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் காலவரையற்று கற்றல் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கி இருக்கத் தீர்மானித்துள்ளனர்.

விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலுகின்ற மாணவர்களின் வரவு பிரச்சினைகள் தொடர்பில் பல்கலைக்கழக விசேட நிர்வாகக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் இன்று மதியம் முதல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்பாக நேற்று விஞ்ஞான பீடாதிபதி மற்றும் துறைத் தலைவர்களுக்கு, விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினரால் எச்சரிக்கைக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில் இன்று நண்பகலுக்குள் சாதகமான முடிவு கிடைக்காது விட்டால் காலவரையற்ற போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ)

# காதல் மனைவிக்குப் பரிசளிக்க திருட்டில் ஈடுபட்ட கணவர் கைது

காதலர் தினத்தன்று தனது மனைவிக்குப் பரிசளிப்பதற்காக 29 பவுண் நகைகளைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய கணவர் உள்ளிட்ட இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 25 வயதான ஆணும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 49 வயதான பெண்ணுமே காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

காதலர் தினத்தன்று வல்வெட்டித்துறை பகுதியில் முதியவர்கள் உள்ள வீட்டினுள் 29 பவுண் நகைகள் திருடப்பட்டன. இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், யாழ்ப்பாணம் நகரில் நேற்று 4 பவுண் நகைகளை அடகு வைக்கச் சென்றபோது பெண் மணி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து பிரதான சந்தேகநபர் 25 பவுண் தாலியுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக நடவடிக்கைக்காக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

## பகலில் வடை வியாபாரம் இரவில் கடை உடைப்பு!

### திருட்டுப் பேர்வழி கைது

பகல் வேளைகளில் ரெயிலில் உணவுகளை விற்பனை செய்து இரவு வேளைகளில் கடைகளை உடைத்து திருட்டில் ஈடுபட்ட நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர். கல்பத்த புன்சிரிகம பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய ஜேமிஸ் என்ற இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

களுத்துறை மற்றும் மொறொந்துடுவ பிரதேசங்களில் உள்ள கடைக்காரர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரின் வாக்குமூலத்தின்படி அவர் கடைகளை உடைத்து திருடிய பணம் மற்றும் பொருட்களை விற்பனை செய்து பெறப்பட்ட பணத்தைக் கொண்டு சீட்டாட்டத்தில் ஈடுபட்டு அவற்றை இழந்துள்ளதாகவும், இதேவேளை அவர் பகல் வேளைகளில் ரெயிலில் வடை விற்று வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளமையும் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை களுத்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (ரெப-52)

## பொலிஸ் மா அதிபர் பதவிக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசபந்து தென்னகோன் நியமிக்கப்படுவதை நான் விரும்புகிறேன். அரச தரப்பில் இருந்தும் அதற்கு எந்த பிரச்சனையும் இல்லை, எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், அரசியல் நிர்ணய சபை வித்தியாசமாக வேலை செய்கிறது என்றும் மக்கள் அனைவரும் அனுமதித்தால் தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட வேண்டும், என்றும் அவர் குறிப்பிட்டார். (04)

## பசில் ராஜபக்சவின் சொகுசு வீடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அதங்கிணங்க, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் உறவினரான நடேசனால் குறித்த நிலம் கொள்வனவு செய்யப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு, இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின்போது, கம்பஹா மேல் நீதிமன்றில் வாக்குமூலம் அளித்த குறித்த வீட்டை நிர்மாணிப்பதற்கு உதவிய கட்டிடக்கலை நிபுணர், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவினால் வழங்கப்பட்ட பணத்தினால், ஒப்பந்ததாரர் ஊடாக வீடு கட்டப்பட்டதாக தெரிவித்தார்.

மேலும், குறித்த வீட்டின் ஆரம்ப பணிகளுக்காக பசில் ராஜபக்ஷவின் மனைவி வருகை தந்திருந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், பசில் ராஜபக்ச நீதிமன்றில் சாட்சியமளிக்கையில், மல்வானை பகுதியில் தாம் சொகுசு வீட்டை நிர்மாணிக்கவில்லை என குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், குறித்த வீட்டின் உரிமையாளரைக் கண்டறிய முடியாத நிலையில், இதனை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சொகுசு வீட்டை நீதியமைச்சுக்கு கீழ் கொண்டு வருவதாகவும், அதனை எதிர்காலத்தில் நீதியமைச்சின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துமாறு கம்பஹா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த வீடு அமைந்துள்ள பகுதிக்கு நேற்று களவிஜயம் மேற்கொண்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, குறித்த பகுதிக்கு பொறுத்தமான வகையில், குறித்த கட்டடத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என விரைவில் தீர்மானித்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டார்.

இந்த வீடானது, 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற மே வன்முறையின்போது தீக்கிரையாக்கப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது. (04)

## ஆயிரத்துக்கும் மேற்பட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகபட்சமாக 13.05 கிராம் எடையைத்தான் குறைக்க முடியும் எனவும் அதிகாரசபை அண்மையில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது.

அரை கிராம் பாணின் எடை 225 கிராம் என்றும், குறைக்கக்கூடிய அதிகபட்ச எடை 9 கிராம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட போதிலும் பல வெதுப்பகங்களில் நிர்ணயிக்கப்பட்ட எடைக்கு ஏற்ப பாண் விற்பனை செய்யப்படுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, தேவையான எடை மற்றும் விலையை காட்சிப்படுத்தாத 453 வெதுப்பகங்கள் மற்றும் கடைகளை நுகர்வோர் அதிகாரசபை கண்டறிந்துள்ளது.

அந்த வெதுப்பகங்கள் மற்றும் கடைகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இது தொடர்பாக ஏதேனும் புகார்கள் இருப்பின் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அவசர தொலைபேசி எண்ணான 1977க்கு தொடர்பு கொண்டு தமக்கு அறிவிக்கலாம் என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

இதேவேளை, பாண் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாக பதுளை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## விமான நிலையத்துக்கு காணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து, குறித்த காணி அளவீடுகள் தொடர்பான விரிவான அறிக்கையை எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதிக்கு முன்பாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என ஜனாதிபதி செயலகத்தால் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 16.02.2024 அன்று நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் அங்கஜன் இராமநாதன் எம்.பியால் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கொக்குத்தொடுவாய் மனிதப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுப்பாய்வின் அடிப்படையில் இது 1994 ஆம் ஆண்டுக்கு முற்படாததும் 1996 ஆம் ஆண்டுக்குப் பிற்படாததுமான காலப்பகுதியைக் கொண்டிருக்கலாம் எனப் பல பக்கங்களைக் கொண்ட அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது ஓர் இடைக்கால அறிக்கையாகப் பார்க்கப்படுகின்றது.

எஞ்சிய எலும்புக்கூட்டுத் தொகுதியை அகழ்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் அநேகமாக மார்ச் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இருப்பினும் அதற்கான நிதி, அமைச்சால் வழங்கப்படும் பட்சத்தில் அகழ்வு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகையால், மார்ச் மாதம் 4 ஆம் திகதிக்கு குறித்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மருத்துவர்களின் அறிக்கையில் மனித எச்சங்களின் வயது, பால், இறப்புக்கான காரணம் போன்றவை குறிப்பிடப்படவில்லை." - என்றார். (அ)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# யாழ். ஆரோக்கிய சதுக்கத்தின் பௌர்ணமி ஒன்றுகூடல் பண்ணை சுற்றுவட்ட நடைபாதைப் பகுதியில் ஏற்பாடு

உடல், உள, மனப்பாங்கு விருத்தியுடன் சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டை நோக்காகக் கொண்ட யாழ். ஆரோக்கிய சதுக்கத்தின் பௌர்ணமி ஒன்றுகூடல் நாளை 23 ஆம் திகதி மாலை 4.30 முதல் பண்ணை சுற்றுவட்ட நடைபாதை பகுதியில் இடம்பெறவுள்ளது.

ஆரோக்கிய வாழ்வுக்கான ஆனந்தமயமான பயணம் எனும் தொனிப்பொருளில் வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆதரவோடு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பொதுவான உடல் – உள ஆரோக்கியத்துக்கான, நோய்ப் பாதிப்புகளிலிருந்து விடுபட உதவும் சிறப்பு யோகாசனப் பயிற்சிகள், நோயற்ற வாழ்வுக்கான ஆரோக்கிய உணவு வகைகள் அறிமுகம், அவற்றை சுவைபடத் தயாரிக்கும் வழிமுறைகள், சித்த – ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை நிபுணத்துவ ஆலோசனைகள், மனவள மேம்பாட்டுக்கான சிறப்பு வழிகாட்டுதல்கள் போன்றன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0777 324004 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தில் வித்தியாரம்ப நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தில் 2024 ஆம் கல்வி ஆண்டுக்கான புதிதாக இணைக்கப்பட்ட மாணவர்களுக்கான ஏடு தொடக்க விழா இன்று பாடசாலை பகுதி தலைவர் டி.கே.எம். மௌஸீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம் றிசாத் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக தொழிலதிபர்கள் எஃப். எம். சகி, ஏ. எம். சிறாஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். தரம் இரண்டு மாணவர்களினால் புதிய மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதுடன், வருகை தந்த அதிதிகளினால் புதிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் பாடசாலையின் பிரதியதிபர் எம்.ரீ.ஏ. மனாப், பாடசாலையின் பகுதித் தலைவர்கள், அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தாருல் உலூம் ஆரம்பப் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை வலயத்திற்குட்பட்ட தாருல் உலூம் ஆரம்பப் பாடசாலையின் மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகளுக்காகவும், தங்குவதற்கு வகுப்பறைக்கான தளபாட வசதிகள் இன்றி காணப்பட்டது.

குறித்த பாடசாலையின் அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க 40 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்ட உயர்தர வகுப்பறை தளபாடங்கள் சம்மாந்துறையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ஏஆர்எம் இர்ஷாட்டினால் இன்று 2024 வித்தியாரம்ப நிகழ்வில் அதிபர் கலீலிடம் ஒப்படைக்கப்பட்டன.

பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பள்ளி ஊழியர்கள் மற்றும் பிற நிர்வாக உத்தியோகத்தர்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் புதிய பிரதே செயலாளர் கடமையேற்பு

(எம் எப். நவாஸ்)

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக பி.ரீ.ம். இர்பான் 20 ஆம் திகதி கடமையேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் இதன் முன்பு கடமையாற்றிய பிரதேச செயலாளர் எம் ஏ சி. அகமது ஷாபிர், உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹிஜா முஷாபிர், கணக்காளர் ஏ எல் எம். றிபாஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ எல். மஜித், நிருவாக உத்தியோகத்தர் கே வி.சலீம், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ எம்.ஹமீட், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ எல். ஜெளபர் பதவி நிலை உத்தியோகத்தர்கள், அட்டாளச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மற்றும் திம்புலாகம பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பருெம் கலந்து கொண்டனர்.






# பாகிஸ்தானில் அமையவிருக்கும் புதிய அரசாங்கம் இழுபறிக்குப் பின்னர் கட்சி ஒப்பந்தம் கைச்சாத்து!

பாகிஸ்தானில் அமையவிருக்கும் புதிய அரசாங்கத்தில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது தொடர்பாக முன்னாள் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சிக்கும், முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் பிலாவல் புட்டோ ஸர்தாரி தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கும் (பிபிபி) இடையே நீண்ட இழுபறிக்குப் பிறகு ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.

இது குறித்து ஷாபாஸ் ஷெரீஃப்பும், பிலாவல் புட்டோ ஸர்தாரியும் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் தகவல் வழங்கியுள்ளனர்.

புதிய அரசில் அதிகாரப் பகிர்வு தொடர்பாக இரு கட்சிகளுக்கும் இடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது. அந்த அரசில் பிரதமராக ஷாபாஸ் ஷெரீஃப் பதவி வகிப்பார். அதிபர் தேர்தலில் இரு கட்சிகளின் பொது வேட்பாளராக பிபிபி கட்சியின் துணைத் தலைவர் ஆசிஃப் அலி ஸர்தாரி நிறுத்தப்படுவார் என்று அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள்தான் மிக அதிக இடங்களைக் கைப்பற்றினர். இருந்தாலும், பெரும்பான்மை இல்லாததால் ஆட்சியமைக்கப்போவதில்லை என்று இம்ரான் கூறிவிட்டார். அதையடுத்து, 2 மற்றும் 3 ஆவது இடங்களைப் பிடித்த பிஎம்எல்-என் கட்சியும், பிபிபி கட்சியும் சிறிய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்க முடிவு செய்தன. இருந்தாலும், இது தொடர்பாக பல கட்டங்களாக நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாமல் இழுபறி நீடித்து வந்தது. இந்தச் சூழலில், இது தொடர்பாக இரு கட்சிகளுக்கும் இடையே தற்போது ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது. (04)



# ரஷ்யா மீது மேலும் பொருளாதாரத் தடை விதிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முடிவு!

உக்ரைன் போர் விவகாரம் தொடர்பாக ரஷ்யா மீது ஐரோப்பிய ஒன்றியம் மேலும் பொருளாதாரத் தடைகளை விதிக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய பொருளாதாரத் தடை அம்சங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஒப்புதல் அளித்துவிட்டன. இதற்கான வரைவில், ஆக்கிரமிப்பு உக்ரைன் பகுதிகளில் இருந்து கிரீமியா, பெலாரஸ், ரஷ்யா ஆகிய பகுதிகளுக்கு சிறுவர்கள் சட்டவிரோதமாக அழைத்துச் செல்லப்படும் விவகாரத்தில் ஏராளமானவர்கள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

தடை விதிக்கப்பட்டவர்களில், டொனட்ஸ்க் பகுதியில் செயல்பட்டு வரும் சிறுவர் காப்பக அமைப்பின் தலைவர் ஓல்கா வோல்கோவாவும் அடங்குவார். உக்ரைன் சிறுவர்களை வலுக்கட்டயமாகக் கடத்திச் சென்று பெலாரஸிலும், ரஷ்யாவிலும் அவர்கள் சட்டவிரோதமாக தத்தெடுக்கப்படுவதில் இவர் முக்கிய பங்கு வகிக்கிறார் என்று கூறப்படுகிறது.

புதிதாக பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் பெலாரஸைச் சேர்ந்த விடெப்ஸ்க் நகராட்சித் தலைவர் டிமித்ரி டெமிதொவ், அந்த நாட்டு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டிம்த்ரி ஷாவுட்சாவ் ஆகியோரும் அடங்குவர் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆக்கிரமிப்புக்குள்ளான தங்கள் நாட்டுப் பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான சிறுவர்கள் ரஷ்யாவுக்கும், பெலாரசுக்கும் சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லப்படுவதாக உக்ரைன் குற்றம் சாட்டி வருகிறது.

அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகம் கடந்த ஆண்டு வெளியிட்ட ஆய்வறிக்கையில், உக்ரைன் பகுதிகளில் இருந்து பெலாரசுக்கு மட்டும் 2,400 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஏற்கெனவே, இந்த விவகாரத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை போர்க் குற்றவாளியாக அறிவித்த ஐ.நா.வின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், அவருக்கு எதிராக கைது உத்தரவையும் பிறப்பித்துள்ளது. இதன் காரணமாக, அந்த நீதிமன்றத்தின் உறுப்பினர்களாக இருக்கும் நாடுகளுக்குச் செல்வதை புடின் தவிர்த்து வருகிறார்.

இந்தச் சூழலில், உக்ரைன் சிறுவர்கள் சட்டவிரோதமாக கடத்திச் செல்லப்பட்டு தத்தெடுக்கப்படுவது தொடர்பாக மேலும் பல ரஷ்யர்கள் மற்றும் பெலாரஸ் நாட்டவர்கள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தற்போது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022 பெப்ரவரி மாதம் படையெடுத்தது. இதனை மிகக் கடுமையாக எதிர்த்து வரும் அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் ரஷ்யா மீது பல கட்டங்களாக பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன. (04)

# உக்ரைனுக்கு நிதி திரட்டிய குற்றம் ரஷ்யாவில் பெண்ணொருவர் கைது!

ரஷ்யாவில் உக்ரைனுக்கு நிதி திரட்டியதாகவும், சமூக வலைத்தளத்தில் உக்ரைனுக்கு ஆதரவாக பதிவுகளைப் பகிர்ந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு 33 வயது பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரஷ்யா, அமெரிக்கா என இரட்டைக் குடியுரிமைப் பெற்றுள்ள க்சேனியா கரெலினா எனும் குறித்த பெண்ணை, தேசத்துரோகக் குற்றத்தின் கீழ் ரஷ்யாவின் மத்திய பதுகாப்பு அமைப்பு கைது செய்துள்ளது. கைது செய்யப்பட்ட பெண் கண்கள் கட்டப்பட்டு, அதிகாரிகளால் குறுகிய பாதை வழியாக அழைத்துச் செல்லப்படும் காணொளி இணைய வலையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் ராணுவத்திற்கு நிதி திரட்டியாக குற்றம் சாட்டப்பட்டுள்ள இவரை ரஷ்யாவின் யெகடெரின் பெர்க்கில் வைத்து அதிகாரிகள் கைது செய்துள்ளனர். 51.80 டொலர் நிதியையே அவர் திரட்டியதாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், அமெரிக்காவில் உக்ரைனுக்கு ஆதரவாக நிகழ்த்தப்பட்ட பொதுக்கூட்டங்களிலும் அவர் கலந்துகொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் இவருக்கு 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

அவர் சமூக வலைதளங்களில் உக்ரைனுக்கு ஆதரவாக பதிவிட்டிருக்கலாம் எனவும் அதைக் குற்றமாக ரஷ்யா கருதுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமூக வலைத்தளங்களில் இது போன்ற விடயங்களைப் பதிவிடுவதற்கு முன்னாலும், போரில் பிற நாடுகளுக்காக நிதி திரட்டுவதற்கு முன்னாலும் நூறு முறை யோசியுங்கள்!, என ரஷ்ய ஊடகவியலாளர் பியோடர் க்ரெஷேனினிகோவ் குறிப்பிட்டிருக்கிறார். (04)

# மெரினா கடற்கரையில் நினைவிடங்கள் திறப்பு அனைத்துக் கட்சிகளுக்கும் ஸ்டாலின் அழைப்பு

தமிழகத்தின் சென்னை மெரினா கடற்கரையில் கட்டப்பட்டுள்ள முன்னாள் முதல்வர் மு.கருணாநிதிக்கான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பேறிஞர் அண்ணா நினைவிடங்கள் வரும் 26 ஆம் திகதி மாலை 7 மணிக்கு திறக்கப்படவுள்ள நிலையில், நிகழ்வில் பங்கேற்குமாறு பேரவை உறுப்பினர்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று காலை 10 மணிக்கு கூடிய தமிழக சட்டப்பேரவையின் கேள்வி நேரத்தில், கருணாநிதி, பேறிஞர் அண்ணா நினைவிடங்களின் திறப்பு விழா தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், சென்னை மெரினாவில் கட்டப்பட்டுள்ள முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி நினைவிடம் வரும் திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு திறக்கப்படவுள்ளது.

நம்தாய்த்தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டிய பேறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா நினைவிடமும் புனரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. புதுப்பிக்கப்பட்டுள்ள பேறிஞர் அண்ணாவின் நினைவிடமும் அன்றைய நாளில் திறந்து வைக்கப்படவுள்ளது. அந்த நிகழ்ச்சிகளுக்கு அழைப்பிதழ்கள் அச்சிடப்படவில்லை. சிறப்பு விழாவாகவும் கொண்டாட முடிவெடுக்கப்படவில்லை. இந்த அவையில் இருக்கக்கூடிய ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, கூட்டணிக் கட்சி, தோழமைக் கட்சி என எல்லாக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் குறித்த நிகழ்விலே பங்கேற்க வேண்டுமென்று அழைப்பு விடுத்துள்ளார். (04)



# திருமலை மக்கள் சேவை மன்றத்தினால் வீடு நிர்மாணிப்புக்கான உதவிகள்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 25 பயனாளிகளுக்கு நிரந்தர வீடுகள் நிர்மாணிப்புக்கான முதற்கட்ட காசோலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ் தலைமையில் திருகோணமலை கிளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க கட்டிடத் தொகுதியில் இடம்பெற்றது.

சிலி நாட்டினைத் தலைமையமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச தொண்டு நிறுவனமான செலவிப் பவுன்டேஷன் மற்றும் வன்னி ஹோப் நிறுவனங்களின் நிதி அனுசரணையில் திருகோணமலை மற்றும் வாகரைப் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள நிரந்தர வீடுகளுக்கான முதற்கட்ட காசோலைகள் குறித்த பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

யுத்தம் மற்றும் இயற்கைப் பேரழிவு காரணமாக நிரந்தர வீடுகள் இன்றி கஷ்டப்பட்டு ஓலைக் குடிசைகளில் மிக நீண்டகாலமாக வாழ்ந்து வந்த குடும்பங்களுக்கே மேற்படி வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

தமிழ், முஸ்லிம், சிங்கள இனம் என்ற பாகுபாடின்றி நீண்டகால வீட்டுத் தேவையுடைய அதிக குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட நாளாந்தக் கூலித் தொழில் செய்து வீடுகள் நிர்மாணிக்க வசதியற்ற குடும்பங்களுக்கே இந்த உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலா சுமார் 10 இலட்சம் பெறுமதி கொண்ட இந்த வீடுகள் செலவிப் பவுண்டேஷன் 60 வீத நிதியினையும், வன்னி ஹோப் நிறுவனம் 30 வீத நிதியினையும் 10 வீத நிதியினை பயளாளிகளின் பங்களிப்புகளில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சு செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளரும் கிழக்கு மாகாணஆளுநரின் இணைப்புச்செயலாளருமான ஏ.எஸ்.எம். பாயிஸ், சிறப்பு அதிதியாக திருகோணமலை மாவட்ட சிவில் சமூக அமைப்புகள் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் ரவீச்சந்திரன் ஆகியோரும், மக்கள் சேவை மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அதன் உத்தியோகத்தர்கள், பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டர் என்பது குறிப்பிடத்தக்கது.



## சேனைக்குடியிருப்பு கணேஷா மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவரை வரவேற்கும் கால்கோள் விழா

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட சேனைக்குடியிருப்பு கணேஷா மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு அனுமதி பெற்ற மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா பெற்றோரின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

“புதுமுக புகுவிழா “ தனது வாழ்கையில் முதன் முதலில் பாடசாலை கல்விக்கு கால் பதிக்கும் முதல் நாள் தினம் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றபோது கல்வி பணிமனை அதிகாரிகள், ஆசிரியர்கள்,மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.




## சம்மாந்துறை பிரதேச செயலக ஹாவெஸ்ட் –2023 ஒன்றுகூடல்



(எம் எப்.நவாஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் மிகவும் பிரம்மாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஹாவெஸ்ட்-2023 ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று (21) பிற்பகல் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்று சென்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களை கௌரவித்து நினைவு சின்னங்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை,

க.பொ.த(சா.த),(உ.த) பரீட்சைகளில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம கலந்து கொண்டார்.

அத்தோடு கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.யோகதீசன் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி அனீஸ்,பிரதம கணக்காளர் ஏ.எல்.ஆதம்பாவா, பிரதம பொறியியலாளர் ஏ.பி சாஹீர், மாவட்ட உள்ளக பிரதம கணக்காய்வாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், பிரதி, உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், சம்மாந்துறை பிரதேச திணைக்களங்களின் தலைவர்கள் காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

உத்தியோகத்தர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் அரங்கேரப்பட்டதுடன், போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

# சுகாதார அமைச்சின் அராஜக நிர்வாகத்தின் கீழ் கௌரவத்துடன் அரச சேவையில் நீடிப்பது கடினம்!

## ஓய்வு பெறுவதாக மருத்துவர் ருக்ஷான் பெல்லன தெரிவிப்பு

சுகாதார அமைச்சின் அராஜக ஆட்சியினால் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறத் தீர்மானித்ததாகவும், சிற்றூழியர்களின் உத்தரவுகளுக்கு உட்பட்டே வைத்தியர்கள் பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார். ஓய்வு பெற்ற பின்னர், அரசின் திறமையின்மை மற்றும் ஊழல்களுக்கு எதிராக போராடுவேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “எனக்கு இப்போது 55 வயதாகிறது. தேசிய வைத்தியசாலையின் நிர்வாகத்தில் நான் சிறப்பாகச் செயற்படுகின்றேன். ஆனால், தற்போதைய நிலைவரப்படி ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன். மருத்துவமனையின் குறைபாடுகளை சுட்டிக்காட்டினேன், போதைப்பொருள் விடயங்களை வெளிப்படுத்தினேன், ஏனைய தவறுகள் மோசடிகள் குறித்தும் வெளிப்படுத்தினேன். ஆனால், ஒரு விடயத்திலேனும் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தவில்லை.

நாட்டின் ஜனாதிபதி, வைத்தியசாலைகளின் பிரசசினைகளுக்குத் தீர்வு காண விரும்புகின்ற போதிலும், சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு அது தொடர்பில் எவ்வித ஆர்வமும் இல்லை. இத்தகைய சுகாதார அமைச்சின் அராஜக நிர்வாகத்தின் கீழ் கௌரவத்துடன் அரச சேவையில் நீடிப்பது கடினம்.

முதுகெலும்புடன் தலை நிமிர்ந்து துணிச்சலுடன் பணிபுரியும் அதிகாரிகள் குழுவொன்று சுகாதார அமைச்சில் தமது கடமைகளை மேற்கொள்ளும் வரை மருத்துவமனை கட்டமைப்பமானது கடுமையான ஆபத்திலிருந்து விடுபடப் போவதில்லை. நான் நேர்மையுடன் கடமைகளை செய்தமையால் தான் மிகவும் அழுத்தத்தில் இருக்கிறேன். நாட்டின் சிவில் நிர்வாகம் நரகமாகிவிட்டது” என்றார். (ரெப-48)




# சட்டத்தை மீறிய 3 நிதி நிறுவனங்களிடம் ரூபா 140 லட்சம் அபராதம் வசூலிப்பு!

கொழும்பு, பெப். 22

நிதி பரிவர்த்தனைகள் அறிக்கை சட்டத்திற்கு இயைபாக நடந்து கொள்ளாத மூன்று நிதி நிறுவனங்களுக்கு எதிராக இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவினால் 140 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு வசூலித்த மொத்த அபராதத் தொகையான 140 லட்சம் ரூபாய் அரசின் ஒருங்கிணைந்த நிதியில் வரவு வைக்கப்பட்டதாக நிதிப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நிதிப் புலனாய்வுப் பிரிவு இலங்கையில் பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வதைத் தடுப்பதற்கான ஒழுங்குமுறை நிறுவனமாகச் செயற்பட்டு வருவதாகவும், 2023 செப்டெம்பர் 27ஆம் திகதி முதல் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே மேற்படி அபராதங்கள் விதிக்கப்பட்டதாக நிதிப் புலனாய்வுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ரெப-50)

# கடந்த வருடம் ரெயில் விபத்தில் 194 பேர் உயிரிழந்ததாக தகவல்

கடந்த 2023 ஆம் வருடம் ரெயில் விபத்தில் 194 பேர் உயிரிழந்துள்ளதாக ரெயில்வே பாதுகாப்பு அதிகாரி அனுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, ரெயில் மிதி பலகையில் பயணித்த 88 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த வருடம் ரெயில் பாதையில் பயணிக்கும் போதும், பாதுகாப்பற்ற ரெயில் கடவைகளில் வாகனங்களை செலுத்தியதாலும் ஏற்பட்ட விபத்துகளினால் மேற்கண்ட நபர்கள் உயிரிழந்துள்ளனர் என தெரிவித்த அவர், ரயிலிலிருந்து இன்னோரன்ன வழிகளில் தவறி விழுந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெப-51)






## தென்கிழக்குப் பல்கலைக்கழக கௌரவ ஸ்தாபக உபவேந்தர் பேரா.எம்.எல்.ஏ.காதருக்கு கௌரவம்



(அஸ்ஹர் இப்றாஹிம் )

தென்கிழக்கு பல்கலைக்கழகம் அதன் ஸ்தாபக உப வேந்தரான பேராசிரியர் எம்.எல்.ஏ.காதர் அவர்களை கௌரவிக்கும் வகையில் சிறப்பு சிவப்பு கம்பள வரவேற்பை நேற்று (21) நடத்தியது.

“பேராசிரியர் எம்.எல்.ஏ.காதர் கடந்த 27 ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு அன்னாரது அர்ப்பணிப்பு மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை இந்த நிகழ்வு கொண்டாடியது.

இலங்கை தென் கிழக்கு பல்கலைக் கழகம் அதன் வரலாறு முழுவதும், கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் அதன் பயணத்தை வழிநடத்தும் பல புகழ்பெற்ற உப வேந்தர்களைப் பெற்றிருப்பது அதிர்ஷ்டம். இருப்பினும், பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் பல்கலைக்கழகத்தின் பாரம்பரியத்தில் ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளார். அவரது தற்போதைய உடல்நல சவால்கள் இருந்த போதிலும், தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் அவரது அர்ப்பணிப்பு மாறாமல் உள்ளது.

சிவப்பு கம்பள வரவேற்பு, ஒரு அரிய மற்றும் இதயப்பூர்வமான சைகை, பேராசிரியர் காதரின் தலைமைத்துவத்திற்கும் தொலைநோக்கு பார்வைக்கும் தற்போதைய நிர்வாகம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக சமூகம் கொண்டிருக்கும் ஆழ்ந்த மரியாதை மற்றும் நன்றியை பிரதிபலிக்கிறது.

2021 இல் சமூகவியலில் இளங்கலை கலை (கௌரவங்கள்) திட்டத்தை தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முதன்முதலில் தொடங்குவதற்கு ஒப்புதல் அளிப்பதில் பேராசிரியர் காதர் முக்கிய பங்கு வகித்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்”, என தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

## தொழிநுட்ப வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா யாழில்



தொழிநுட்ப வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் - கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் செயலக கேட்போர் கூடத்தில் வடக்கு மாகாண இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், பிரதம செயலாளர் எஜ்.எம்.சமன் பத்துலசேன, வடக்கு மாகாண பொறியியல் சேவைகள் முன்னாள் பிரதிப்பிரதம செயலாளர் சோ. சண்முகானந்தன், வடக்குமாகாண கட்டடங்கள் திணைக்கள முன்னாள் மாகாணப் பணிப்பாளர் செ.மோகனதேவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.02.2024 இல் வெளியிடப்பெற்றது.